தினமலர்

3.10.2017

# விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம்



வேலாயுதம்பாளையத்தில் நடந்த மாரத்தான் போட்டியை கரூர் கபாடி கழக தலைவர் அன்புநாதன், சவுடாம்பிகா கல்விக் குழும தலைவர் ராமமூர்த்தி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர்.

வேலாயுதம்பாளையம், அக். 3-

பரமத்தி வேலூர் லீ பிட்னெஸ் சென்டர் சார்பில் இயற்கையை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டப்பந்தயம் வேலாயுதம் பாளையத்தில் நடந்தது.

மரக்கன்று நடுவது, நீர் நிலைகள் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பது என்பது உட்பட இயற்கையை பாதுகாப்பது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடந்த மாரத்தான் போட்டிக்கு லீ பிட்னெஸ் சென்டர் நிர்வாகி செந்தில்குமார் தலைமைவகித்தார். வேலாயுதம்பாளையம் இன்ஸ்பெக்டர் குருநாதன், டிஎன்பிஎல் கிருஷ்ணன், சுமங்கலி செல்வராஜ், ரவிக்குமார், முனுசாமி, முத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். சதீஷ் வரவேற்றார்.

கரூர்மாவட்ட கபாடிகழக தலைவர் அன்புநாதன், சவுடாம்பிகா கல்விக் குழும தலைவர் ராமமூர்த்தி ஆகியோர் மாரத்தான் போட்டிகளை கொடியசைத்து துவக்கி வைத்தனர். இதில் பள்ளி மாணவர்களுக்கான 2 கி.மீ. ஓட்டப்பந்தயத்தில்

அபிலாஸ் முதலிடமும், சன்தீப் இரண்டாமிடமும், கோகுல் மூன்றாமிடமும் பெற்றனர். பெண்கள் ஓபன் 2 கி.மீ. ஓட்டப்பந்தயத்தில் முத்துமாரி முதலிடமும், ரம்யா இரண்டாமிடமும், செல்லம் மூன்றா மிடமும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கலப்பு 6 கி.மீ. ஓட்டப்பந்தயத்தில் அருண் முதலிடமும், அபிலேஷ் இரண்டாமிடமும், ரஜின்லால் மூன்றாமிடமும் பெற்றனர்.

இதில் கலந்து கொண்டவர்களுக்கு மரக்கன்று வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை லலீதா, சதீஷ்குமார் உட்பட லீ பிட்னெஸ் சென்டர் நிர்வாகிகள் செய்திருந்தனர்.